உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமத் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள்
அருளிச் செய்த

கொடிக்கவி

உரையாசிரியர் :
சி... ...மூர்த்திப் பிள்ளை
...ள்

சைவ சித்தா...
சங்கரன்கோ...

C.S.S.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க !

வெளியீடு எண் : 58

ஸ்ரீ உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள்

அருளிச் செய்த

கொடிக்கவி

பதவுரை :

"சித்தாந்த பண்டித பூஷணம்"

சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள்

வெளியிட்டோர் :

சைவ சித்தாந்த சபையார்,

246, வடக்கு ரதவீதி,

சங்கரன்கோவில்.

நாள் : 22.4.2005

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

கொடிக்கவி

(விளக்க உரையுடன்)

தோற்றுவாய்

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுள் ஒன்று **கொடிக்கவி**யென்பது. அதற்கு ஆசிரியர் ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள். அவர்கள் தில்லைத் திருவுடையந்தண குல தீபமாய் விளங்கியவர்கள். அத்தலத்தில் ஸ்ரீமந் நடராஜப் பெருமானாரின் திருவிழா வந்தது. அக்காலைக் கொடியேற்றுமுறை அவ்வாசாரிய சுவாமிகளுக்குரியதாயிற்று. ஆனால் மற்றை வேதியர்களால் அவர்கள் அவ்வுரிமையினின்றும் விலக்கப்பட்டிருந்தார்கள். விலக்கிய சில வேதியர் அக் கொடியை ஏற்ற முயன்றனர். கொடி ஏறவில்லை. திகைத்தனரவர். 'எம் அன்பன் உமாபதி சிவன் வந்து ஏற்றினால் அஃதேறும்' என்று தாண்டவ மூர்த்தியார் வான்மொழியாற் புகன்றருளினர். அவ்வேதியர் அதனைக் கேட்டு அவ்வாசாரிய சுவாமிகள் இருக்கும்மிடஞ் சென்று அவர்களை வணங்கிச் சிவபிரானாரின் அருளிப்பாட்டை விண்ணப்பித்து, வந்தருளுமாறு வேண்டினர். சர்வலோக சரண்யராகிய பரசிவப் பிரபுவின் திருவடிப்பற்றையே பற்றாகக் கொண்டுஅவரருள் வசமாய் நின்றுவரும் ஸ்ரீமத் சுவாமிகள் அச்சிவாக்ஞையைச் சிரமேற் கொண்டு ஆலயத்துக்கு வந்து இரு கரங்களையுங் கூப்பிக் கூத்துடைப் பெருமானாரைச் சிந்தித்த வண்ணமாய் நின்று நான்கு திருப்பாட்டுக்களைப் பாடியருளினார்கள். கொடி தானாக ஏறியது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வான வாத்தியங்கள் முழங்கின. ஆங்குக் குழுமியிருந்த வேதியர் முதலிய அனைத்துச் சிவபக்த சீலர்களும் ஹர ஹர முழக்கஞ் செய்தார்கள். அந் நான்கு பாட்டுஞ் சேர்ந்து **கொடிக்கவி** யென்னும் இந் நூலாயிற்று. இது கொடிப்பாட்டு எனவும்படும். முதற் பாட்டுக் கட்டளைக் கலித்துறை. மற்றவை வெண்பாக்கள்.

கொடிமரம் சிவமயம், கொடிச்சீலை திரோதான சத்தி ; அதில் வரையப்பட்டுள்ள இடபம் உயிர். கொடிக் கயிறு அருள். அதனோடியைந்துள்ள தருப்பைக் கயிறு பாசம். சிவபிரான் ராஜாதி ராஜர். உயிர்கள் அவரின் குடிகள். அக் குடிகளை வருத்தும் வேடராதியோர் பாச வகைகள். அவரையொழித்து அவ் வுயிர்களைத் தம்பா லாக்கிப் பரிபாலிப்பவர் அச் சிவ ராஜரே. அத்திறன் அவருக்கேயுண்டு. அவர் திருமுன் ஏற்றப்படுங் கொடி அவ்வுண்மையை விளக்கும். கொடி ஏறுகின்றது. வேடரெல்லாஞ் சத்தி கெட்டோடுகின்றனர். உயிர்களெல்லாம் உய்தி கூடிப் பேரின்ப வாழ் வெய்துகின்றன. வைதிக சைவ ராஜாங்க கௌரவ மன்றோ அவ் விடபக் கொடி. அது கம்பீரமாய்ப் பறந்திடுக.

குரு வணக்கம்.

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சார் உமாபதி தேசிகன் செஞ்சரணாம் புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முதற்பாட்டு.

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிட மொன் றுமேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளடரா துள்ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படி கொடி கட்டினனே.

பதவுரை.

ஒளிக்கும்	-	சிவஞானத்துக்கும்
இருளுக்கும்	-	ஆணவமலத்துக்கும்
ஒன்றே இடம்	-	ஆன்ம வர்க்கம் ஒன்றுமட்டுமே தங்குமிடமாகும்.
ஒன்று மேலிடில்	-	சிவஞானம், ஆணவ மலம் ஆகிய இரண்டனுள் ஒன்று மேலிட்ட காலத்தில்
ஒன்று ஒளிக்கும்	-	மற்றொன்று மறைந்து விடும்
எனினும்	-	என்றாலும்
இருள்	-	ஆணவ மலமானது
அடராது	-	(சிவஞானத்தைப்) பந்தியாது.
உயிர்க்கு உயிராய்	-	எல்லா உயிர்களுக்கும் உயிராகி
உள்தெளிக்கும்	-	அவைகளறிவை விளக்குகின்ற
அறிவு	-	சிவஞானமானது
திகழ்ந்து உளதேனும்	-	(பூர்வ புண்ணிய விசேடத்தினால் சிறிது) ஆன்மாவின் மாட்டு விளங்கினாலும்
உயிர்	-	அவ்வான்மா
திரிமலத்தே	-	(ஆணவம், கன்மம், மாயை ஆகிய) மும்மலங்களிலே
குளிக்கும்	-	பந்தப் பட்டுத்தான் இருக்கும். (ஆகையால் அவ்வுயிர்)
அருள்கூடும்படி	-	(தீக்ஷாக் கிரமத்தினாலே மல நீக்கம் பெற்றுத்) திருவருளைப் பொருந்தும்படி
கொடி கட்டினன்	-	(நான்) துவசங் கட்டினேன்.

கருத்து.

சிவஞானம் ஒன்று. ஆணவ மலம் மற்றொன்று. இவ்விரண்டற்கும் தங்குமிடம் உயிர். அவ்விரண்டனுள் ஒன்று மேலிட்டபோது மற்றொன்று மறையும். ஆனாலும் ஆணவ மலம் சிவஞானத்தைப் பந்தியாது. சிவஞானம் உயிர்க் குயிராகும், அதனறிவை விளக்கும். உயிர் செய்த பூர்வ புண்ணிய விசேடத்தால் அதன்பால் அந்த ஞானம் சிறிது விளங்கக்கூடும். ஆனாலும் அவ்வுயிர் மும்மலபந்தம் நீங்கப் பெறாது. அவ்வுயிர்க்குத் தீக்கைப்பேறு அவசியம்; அதனால் அவ்வுயிர் அம் மல நீக்கம் பெறும்; திருவருளிற் பொருந்தும். அது நிகழும்படி நான் கொடியை யேற்றினேன்.

விளக்கம்:

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; தத்துவங்கள் முப்பத்தாறு. அவற்றுள் ஒன்று ஆங்காரம் என்பது. அது மூவிதம். சாத்துவிக அகங்காரம், இராசத அகங்காரம், தாமச அகங்காரம் என்பன அவை. சாத்துவிக அகங்காரத்தில் சத்துவ குணம் மேலிட்டிருக்கும்; இராசத தாமச குணங்கள் அடங்கி இருக்கும். இராசத அகங்காரத்தில் இராசத குணம் மேலிட்டிருக்கும்; சத்துவ தாமச குணங்கள் அடங்கியிருக்கும். தாமச அகங்காரத்தில் தாமச குணம் மேலிட்டிருக்கும்; சத்துவ இராசத குணங்கள் அடங்கியிருக்கும். தாமச அகங்காரத்தில் அடங்கியிருக்கு மென்று சொல்லப்பட்ட இரண்டு குணங்களில் ஒன்றாகிய சத்துவ குணம் பரிணமிப்பதால் உண்டாவதே ஒளி. சாத்துவிக அகங்காரத்தில் அடங்கியிருக்கு மென்று சொல்லப்பட்ட இரண்டு குணங்களில் ஒன்றாகிய தாமச குணத்தின் சாரம் பரிணமித்து இருளாகும். இருள் மறைக்கம். ஒளி விளக்கும். ஆகலின் அவ்விரண்டும் மறுதலைப் பொருள்கள். ஆயினும் அவை ஏக காலத்தில் ஒரே யிடத்திலிருப்பன. அதனை 'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம்' என்றது கவி.

ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும் :

பகலிலும் இருள் உண்டு. இரவிலும் ஒளியுண்டு. பகலில் இருளில்லை யென்றால் வெயிற் காலத்தில் மரத்தினடி முதலிய விடங்களில் நிழல் உண்டாத லில்லை. இரவில் ஒளியில்லை யென்றால் கார்காலத்தில் இருள் நடுவில் மின்னல் உண்டாத லில்லை. பகலில் ஒளி மிக்கிருக்கும். இருள் அதிலடங்கிக் கிடக்கும். இரவில் இருள் மிக்கிருக்கும். ஒளி அதிலடங்கிக் கிடக்கும். அத்தனையே. இருள் கண்ணைக் கவர்ந்து நிற்கும் போது கண் எதனையுங் காண மாட்டாமல் மயங்கும். ஒளி கண்ணைக் கவர்ந்த போது கண் பொருளைக் காணும் விளக்கம் பெறும். இருள் மேலிட்டால் ஒளி மடங்கும், ஒளி மேலிட்டால் இருள் மடங்கும் என்பதற்குப் பொருள் அதுவே. அதனை 'ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்' என்றது கவி.

இருள் அடராது :

ஒளிபோல்வது சிவம், இருள் போல்வது மலம், கண்போல்வது உயிர். சிவமும் மலமும் பகைப் பொருள்கள். அவை ஏக காலத்தில் உயிர்மாட்டுள்ளன. சிவம் நிலைபெற்று விளங்கும் ஞானத்தை யுடையது. அந்த ஞானம் சூக்குமம். அது விளங்குதற்கு வியஞ்சகம் வேண்டாம். மலம் அந்த ஞானத்தைப் பந்தியாது. ஞாயிற்றின்முன் இருள்போல் அம்மலத்துக்குச் சிவத்தின்முன் செயலில்லை. 'இருள் அடராது' என்ற அடிக்குப் பொருள் அது.

உயிர்க்கு உயிராய் உள்தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும் திரிமலத்தே குளிக்கும் :

உயிரறிவு ஏகதேசம். அது தூலம், ஆதலின் வியஞ்சகமின்றி அது விளங்காது. அதனைப் பற்றிக்கொண்டது மலம். அதாவது உயிரே மலவயப்பட்டு மயங்குகிறதென்பது. அதுதான் மலம் மேலிட்ட நிலை. உயிருக்கு மேலிட வேண்டுவது சிவத்துவம். அது மேலிடின் அவ்வுயிரி னறிவு விளங்கும்.

உயிரிற் சிவம் ஒன்றி யிருக்கிறது. உயிர் மலக்சூழலிற்பட்டுக் கிடக்கும்போதும் சிவம் அதற்குத் தோன்றாத் துணையே. உயிர் பிறவிதோறும் புண்ணியங்களைச் செய்யும். அப் புண்ணியத்துக்குப் பயனுண்டு. சிவம் அவ் வுயிர்மாட்டு ஓரளவிற்கு விளங்கித்

தோன்றுவதே அப் பயன். ஆயினுமென்? அம் மலச்சூழல் அவ் வுயிருக்கு அறவே நீங்காது. அதனை 'உள்ளுயிர்க் குயிராய்த் தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே குளிக்கும்' என்றது கவி.

அருள் கூடும்படி :

உயிர் புண்ணியத்தைச் செய்ய வேண்டும். புண்ணியங்கள் பல. அவை இருவகையாயடங்கும். ஒன்று பசு புண்ணியம். வேள்வி முதலிய அது. இன்னொன்று பதி புண்ணியம். சரியையாதிய அது. உயிர் தான் செய்த புண்ணியங்களுக்குத் தக மேன்மேற் சமயங்களிற் போய்ப் பிறக்கும். ஆயின் அது சைவத்திறத் தடைதல் அருமையினும் அருமை. அதில் அவ்வுயிர் சரியை கிரியா யோகங்களைச் செய்து ஞானத்தைப் பெறும். சரியை யாதிகள் போலச் சிவதீக்கையும் வேண்டப்படுவதே. உயிரை அதன் நல்வினைப் பயனால் மேல்நோக்கிச் செலுத்துவது திரோதான சத்தி. அது மலத்தைப் பற்றி நின்று தொழிலாற்றும். அஃதாவது அம்மலத்தைப் பாகப்படுத்தலாம். பாகம் - பக்குவம். மலம் பரிபாகம் அடைந்து தேய்ந்துகொண்டே வரும். மலப்பிணிப்பு நெகிழ்தலே அத்தேய்வு. அத்திரோதான சத்தி, சிவத்தின் கருணை மறம். கருணைமறம் - மறக் கருணை. மலம் தேயத் தேய அக் கருணை சிறிது சிறிதே அறக் கருணையாக மாறி உயிரின்மாட்டுப்பதியும். அறக் கருணை - கருணை. அதுதான் சிவத்தின் சிற்சத்தி. சிற்சத்தி - பராசத்தி. அப் பராசக்தி உயிரின் மாட்டுப் பதிவது சத்திநிபாத மெனப்படும்.

உயிருக்குச் சத்திநிபாதம் படி முறையால் நிகழும். மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பன அம்முறை. அவற்றிற்கேற்ப உயிர் சரியையாதிகளைச் செய்யும். சமய தீக்கையுற்றுச் சரிய்ை நெறியிலும், விசேட தீக்கையுற்றுக் கிரியை நெறியிலும் யோக நெறியிலும், நிர்வாண தீக்கையுற்று ஞான நெறியிலும் நிற்க வேண்டும். அத் தீக்கைகளின்றி அந்நெறிகளில் நின்றாற் கிடைப்பது அற்பப் பயனே. அத் தீக்கைகளை யுற்றுப் பத்திவாயிலாக அம் மார்க்கங்களை ஆதரிப்பதே முழுப் பயனையுந் தரும். அத் தீக்கைகளும், சரியையாதிகளும், பத்தித் திறன்களும் உயிருக்கு

ஞானத்தைக் கொடுத்தல்லது நேரே வீடு பேற்றைத் தரா. அவையனைத்தும் ஞானத்துக்கு அங்கம், ஞானமொன்றே வீடு பேற்றை நேரேயருளும்.

தீக்கை யென்பதற்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்தலென்பது பொருள். அதனை உயிர்க்குச் சற்குறவன் செய்வன். அது சிவத்தின் கிரியாசத்தி வியாபாரம். கிரியாசத்தி, ஞான சத்தியின் வேறன்று. ஆகலின் அத்தீக்கை மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்தல் கூடுமென்க. அத்தீக்கையின் விதங்களும் பல. அவை சாதாரம் நிராதாரமென இரண்டாயடங்கும். நிராதார தீக்கை பிரளயாகல விஞ்ஞான கல வுயிர்களுக்குச் செய்யப்படுவது. சகல உயிர்களுக்கு ஆவது சாதார தீக்கை. சிவம் குருமூர்த்தியினறிவில் தங்கி அருளுமுறையே, சாதார தீக்கை. அதுவும் பல பரிபாகத்துக்கேற்பப் பலவகையாம். அவற்றுட் சிறந்தது ஔத்திரியென்பது. நயனம், பரிசம், மானதம், வாசகம், சாத்திரம், யோகம் என்பன ஔத்திரிக்கு அங்கமாகவும், அங்கமல்லாமற் சுதந்திரமாகவுஞ் செய்யப்படும். ஔத்திரியும் ஞானவதி, கிரியாவதி, யென்றிருவகைத்து. சதாசாரியன் பக்குவமடைந்த வுயிருக்கு அவ்விரண்டனு ளொன்றைச் செய்வன். அவ்வுயிர் எடுத்த வுடம்பால் அனுபவிக்கும் வினைப் பகுதி பிராரத்தமெனப்படும். அதுபோக, எஞ்சி நின்ற பகுதி சஞ்சிதாமாகும். அது பற்றிக் கிடப்பதற்கு இடங்கொடுத்து நிற்பன ஆறத்துவாக்கள். அவை மாயேயமல மெனப்படும். அம் மலமும், அவ் வினையும் தீக்கையாற் சுத்தியாகும். சுத்தியாதலாவது ஒழிதல். தீக்கை சிவத்தின் கிரியா சத்தியாதலால் அது அச் சுத்தியைச் செய்யுமென்பது பொருந்தும். ஆணவ மலமும், ஆகாமிய வினையும் சிவத்தின் ஞானசத்தியால் ஒழியற்பாலன. பிராரத்தத்தை அவ்வுயிர் அனுபவித்துத் தொலைக்கும். உயிரின் பிறவிக்கு ஹேது ஆணவ மலம். உயிரினிடம் சிவம் பிரகாசித்தற்கு ஹேது ஞானம். தீக்கையோ அத்துவ சுத்தி செய்யு முகத்தால் அந்த ஆணவ மலத்தைக் கெடுத்து அந்த ஞானத்தை யுதிப்பிக்கும். கவியிலுள்ள 'அருள்' என்றது அந்த ஞானம்.

இரண்டாம் பாட்டு.

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே - தருளாளா
நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

பதவுரை.

பொருள்	-	பொருள்களிலே
ஆம் பொருள் ஏது	-	உன் பொருளாகிய சிவம் ஏது? (இல்லை)
போது ஏது	-	கிரணத்தை உவமையாக உடைய சத்தி ஏது? (இல்லை)
கண் ஏது	-	கண்ணை உவமையாக உடைய உயிர் ஏது? (இல்லை)
இருள் ஆம்	-	அஞ்ஞானமாகிய
வெளி ஏது	-	சகலாவத்தை ஏது? (இல்லை)
இரவு ஏது	-	கேவலாவத்தை ஏது? (இல்லை) (என்று சொல்லும் மந்த மதியினருக்கு நல்லறிவு கொளுத்தும் பொருட்டு அத்தனை பொருள்களும் உள்ளவையே என்று உறுதி கூறி)
அருளாளா	-	திருவருள் நிறைந்த சிவபெருமானே;
நீபுரவு ஆ வையம் எல்லாம்	-	நீ ஆண்டருளுதல் பொருந்திய உலகம் முழுவதும்
(அறிய)	-	தெரிந்து கொள்ளும்படி
நீ அறிய	-	நீயே சாக்ஷியாக
கோபுர வாசல்	-	திருக்கோபுர வாசலிலே
கொடி கட்டினேன்	-	(நான்) துவசங் கட்டினேன்.

கருத்து.

பொருள்கள் பல. அவற்றுட் சிவம், சத்தி, உயிர், சகலம், கேவலம் என்பன முக்கியம். அவையெல்லாம் இல்லாதன என்பர் மூடர். சிவபிரானே ! நீ ஆண்டருளுதலை யுடையது உலகம். அது சாட்சி. நீயுஞ் சாட்சி. அவ்வனைத்தும் உள்ளனதானென்று நான் சத்தியஞ் செய்து உன் கோபுர வாசலிற் கொடி கட்டினேன்.

விளக்கம்.

ஆம் பொருள் ஏது :

வேத சிவாகமங்களே முழு முதல் நூல்கள். அவை சிவத்தையே முழுமுதற் பொரு ளென்னும். அதனை யுடன்படுஞ் சமயம் சித்தாந்த சைவம். ஆகலின் அஃதொன்றே சர்வத்ர ஆஸ்திகம். அச்சிவம் முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அதீதமானது. அகச்சமயங்கள் ஆறு. அவை பாடாணவாத சைவம் முதலியன. லயபோக அதிகார சிவன்களே அவற்றிற்குப் பரம்பொருள். ஆக்லின் அவை சித்தாந்த சைவத்துக்கு அணுக்கமாகிய ஆஸ்திகங்களாம். அச்சிவன்களுக்குரிய தத்துவங்கள் ஐந்து. அவை சுத்தம். அவ்வைந்தும் போக எஞ்சியுள்ளன முப்பத்தொன்று.. அவற்றுள்ளும் ஒவ்வொரு தத்துவத்துக்கும் ஒவ்வோ ரதிபதியாகப் பலருளர். அவருள் ஒவ்வொருவரை ஏனைச் சமயங்களுள் ஒவ்வொன்று பரம்பொருளெனக் கொள்ளும். அது உடையனல்லாதானை உடையனெனக் கொள்வதாகும். உடையன் - பரம்பொருள். ஆகலின் அச்சமயங்களை ஒரு சேர நாஸ்திகங்களெனக் கூறிவிடலாம். சிவ பரத்துவத்தில் நிச்சய புத்தி நூலறிவால்மட்டில் சித்தியாது. அதற்குத் திருவருட் கண்ணும் வேண்டும். வியாதன் வேத பண்டிதன்றான். ஆயினும் அவனுக்கு ஞானக்கண் இல்லாது போயிற்று. ஆகலின் வேதப்பொருளாவார் விட்டுணுவேயென அவன் பொய்யுரைத்துத் துயரெய்தினான். 'விச்சை நூல் பல கற்பினுஞ் சிவனருள் விரவாக், கொச்சையோர்தமை விடுவதோ கொடுமலச் செருக்கு' என்றது காஞ்சிப்புராணம். 'ஆம் பொருள் ஏது?' என்ற அடி உள்பொருளாகிய அச்சிவத்தை யில்லை யென்றபடி. இது ஒரு சாரார் கூற்று.

போது ஏது? : உயிர் அறிகின்றது, அதற்குக் கருவிகளா யுதவுவன எட்டு. அவை ஆன்மதத்துவம், தாத்துவிகம், கலையாதியன. காலம், நியதி, உடம்பு, பிரமாணம், நால் வகை வாக்கு என்பன. அக்கருவிகளெல்லாஞ் சடம் (உயிரற்ற பொருள்), அவ்வுயிரும் அறிவிக்க அறியும் இயல்புடையது. ஆகவே உயிர்

அக்கருவிகளைக் கொண்டு அறிதற்கு ஒரு சேதனப் பொருளின் (உயிருள்ள பொருளின்) சகாயமும் வேண்டும். அச்சகாயந்தான் சிவசத்தியாகிய திரோதான சத்தி. அது உயிருக்குக் கருவிகளைக் கூட்டியும், உள்நின்று அறிவித்தும் வருகிறது. அவ்வுபகாரத்தால் உயிர் முதலில் ஏகதேச அறிவைப் பெறும்; அதனால் சிறுபோகங்களை நுகர்ந்து பிறவிகளிற் படும். காலாந்தரத்தில் அது பக்குவமடைதலுஞ் சித்தம். அதுவும் அச்சத்தியால் உளதாவதே. அப்போது அச்சத்தி அருட்சத்தியாக மாறி அவ்வுயிரின் வியாபக அறிவை விளக்கும். அவ்வுயிருக்குப் பரபோகங் கிடைப்பது அப்போதுதான். என்னே சிவசத்தியின் மகோபகாரம் ! ஆயினும் அதை அயர்த்து நிற்பார் எத்தனை பேர் ! உயிர்க்குத் தன்னளவில் அறியுஞ் சத்தியுண்டென்பர் மீமாம்சகர். உயிர்க்குக் கருமமே அறிவைக் கொடுக்கு மென்பர் ஆருகதர். மேற்காட்டிய தத்துவ தாத்துவிகங்களே உயிரறிவை விளக்கு மென்பர் சாங்கியர். அவரெல்லாம் உயிரறிவின் விளக்கத்துக் சிவசத்தியினுபகாரத்தை யுடன்படார். நன்றி கொன்றலே அது. 'போதேது' என்ற தொடர் அச்சிவசத்தியை யில்லை யென்றபடி.

போது : சிவம் நிர்க்குணம் என்னும் வேதம். நிர்க்குணம் - குணமில்லாதது. நிர்க்குணம் என்பதற்கு எவ்வகை குணமூ மில்லாமை யென்றனர் மாயாவாதியர். குணங்கள் இருவகை. ஒன்று மாயா குணம். சத்துவம், இராசதம், தாமதம் என்பன அது. இன்னொன்று இறைமைக் குணம். தன் வயத்தனாதல், தூய வுடம்பின னாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்ப முடைமை யென்பன அது. சிவத்தினிடமில்லாதது அம்மாயா குணம். அதனால் அச் சிவம் நிர்க்குண மெனப்பட்டது. தன் வயத்தனாதல் முதலிய [1]எட்டுக் குணங்களும் சிவத்தோடு அபின்ன மானவை.

---

1. "கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"
என்னும் திருக்குறளின் பொருள் உற்றறியத்தக்கது.

அவை அச் சிவப் பொருட்குத் [1]தாதான்மிய சத்தியாகும். நிர்க்குண மென்ற சொல்லே பற்றி அவ்விறைமைக் குணங்களையும் இல்லையென்றல் தவறு. 'முதல்வன் இம் முக்குணங்களும் கடந்தவனாகலான் இவற்றுளொன்றாக அறியப்படா' னென்பார் 'நிர்க் குணனாய்' என்றும், 'நிர்க்குணன் என்பது ஒரு குணமு மில்லான் என்றுரைப்பின் அது தன்வயத்தனாதல் முதலிய எண் குணங்களை இயல்பாக வுடைய முதல்வனுக் கேலாமையின் மாயாவாதி முதலியோர் கூற்றாய் முடியுமென் றொழிக' என்றது ஸ்ரீ பாஷ்யம். மாயாவாதியர் கூறுவது கொடிது. 'போதேது?' என்றதிலுள்ள போது என்பது அவ்விறைமைக் குணங்கள்.

கண் ஏது : சிவம் முழுமுதற் பொருள். அதன் அருட்சத்தி உபகரிப்பது. அவ்வுபகாரத்தை யனுபவிக்கும் உரிமையுடையது உயிர். சிவம் மன்னவன் போல்வது. உயிர் அவன் குமரன் போல்வது. மன்னவ குமாரன் அறியாப்பருவத்திலிருந்து வேடர் சேரியில் வளர்வானாயின் தன்னியல்பை மறந்து அவ்வேடரியல்பையே தன்னியல்பாகக் கொண்டு அலமருவான். மன்னவனே அப்பிள்ளைக்கு அவ்விழிவை யுணர்த்த வேண்டும். பரிவால் அவன் அதனை யாற்றுவான். அப்பிள்ளை தெளிந்து அவ்வேடரைவிட்டு விலகித் தனக்கு உரிய அரசை நோக்கித் திரும்புவான். அப்படியே உயிர் ஐம்புல வேடரிடை வளர்ந்து தன்னியல்பை யயர்த்தது. அது உண்மையிற் சிவானுபவத்துக்கே யுரியது. சிவம் அவ்வுயிர்க்கு அவ்வயர்ச்சியை நீக்கி அவ்வனுபவத்தைக் கொடுக்கக் கருணை செய்துள்ளது. ஆனால் அந்தோ எத்தனைபேர் உயிரென வொருபொருளே யில்லையென்கிறார் ! உடல், பொறி, கரணம், உயிர்ப்பு, பிரமம் முதலியவற்றையே தனித்தனி உயிரென மயங்கிக் கொண்டு தற்கொலை செய்து கொள்கிறாரவர். தன் உண்மையை

---

2. தாதான்மிய சத்தி - எப்பொழுதும் விட்டு நீங்காமல் நிற்குஞ் சத்தி - (தாதான்மியம் - அது தானாதல். முதல்வனின் ஆணையாகிய சிற்சத்தி முதல்வனின் வேறின்றி அவனின் வியாப்பியமாய் நிற்றல்), முதல்வன் தனது சிற்சத்தியோடுபேதமும் அபேதமுமின்றி அவ்விரண்டற்கும் பொதுமையாய் நிற்பன், தன்னெல்லையளவும் வியாப்பியமாய் நிற்கும் ஞாயிறு தன் கிரணத்தோடு அவ்வாறு நிற்றல் போலும். (சிவஞான பாடியம் - பக்கம் 256)

மறுப்பவன் பிறர் செய்யும் உபகாரத்தை நினைப்பனா? அவ்வறிவிலி அச்சிவசத்திகளையும் மறுப்பதியல்பே. பேரின்ப நுகர்ச்சிக்குச் சேயனாகிறானவன். அவனுக்கு ஐயோ ! கவியிற் 'கண் ஏது?' என்றதிள்ள 'கண்' என்பது உயிர்.

இருளாம் வெளி ஏது? இரவு ஏது? : உயிர்க்கு அவத்தைகள் மூன்று. அவை கேவலம், சகலம், சுத்தம் என்பன. உயிர் ஆணவ மலத்தோடு மாத்திரையே கூடி நிற்பது அதற்குக் கேவலம். அவ்வுயிர் உடலினையெடுத்துக், கலையாதி போககாண்டத்தைக் கொண்டு, புத்தியாதி போக்கிய காண்டத்திற்பட்டு, இச்சை அறிவு செயல்கள் சிறிதே விளங்கப் பெற்றுச் சத்தாதி விடயங்களைப் புரிந்து போகத்தை நுகர்ந்து பிறப்பிறப்புக்களிலுழன்று, புவனந்தோறும் புடைபெயர்ந்து திரிவது அதற்குச் சகலம். அச்சகலம் நீங்கி உயிர் திருவருளைக் கூடும். அது அவ்வுயிர்க்குச் சுத்தம். கேவலம் இரவு போல்வது. அதனை நோக்கச் சகலம் பகலாகும். ஆயினும் சுத்தத்தை நோக்க அஃது இரவை (இருளை)யே நிகர்க்கும். ஆகலின் அது கவியில் 'இருளாம் வெளி' யெனப்பட்டது. இருளாம் வெளி யென்றதால் ஒளியாம் வெளியுண்மை கருதிக் கொள்ளப்படும். அதுவே சுத்தம்.

வையமெலாம் அறிய : [1]ஐக்கியவாத சைவர் ஆணவமல முண்டெனக் கொள்ளார். ஆகலின் கேவலாவத்தை அவரால் மறுக்கப்படும். அவரோ டினப்பட்டவர் மாயாவதியர். அவர் உயிரின் சகலத்தை மித்தையென்பர். அங்ஙனம் கேவல சகலங்களாகிய பந்தத்தை யுடன்படாத அவ்விரு வகையினரும் சுத்தத்தைப் பெறுதல் யாங்ஙனம்? 'நோய் நாடி நோய்முத னாடியது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்ற குறளை அவரறிக. தம் மதங்களிலும் முத்தி யுண்டென அவர் கூறுவது ஆரவாரமே. கட்டியது, கட்டப்பட்டது, விடுவிப்பது ஆகிய மூன்றில் ஒன்றன் உண்மையை யில்லை யென்பவனும் மெய்யான விடுதியை யாண்டும்பெறான். விடுதி - முத்தி. அவனுக்கு அப்பேற்றின்கண் மனவெழுச்சி செல்லாது. கேவல சகலங்களிலும் உயிருக்குச்

---

1. லிங்கங்கட்டிகள்

சிவசத்தி உபகரித்துக் கொண்டிருக்கும். அவ்வுபகாரம் சூக்கும வைந் தொழிலும். தூல வைந்தொழிலுமாம். அவ்வவத்தைகளை மறுப்பது அவ்வுபகாரத்தையே மறுப்பதாகும். அம்முகத்தால் அம்மதத்தவர்க்கு உயிரு மின்றாம், சிவசத்திகளும் புறகாம்.

அந்நாத்திக ரெல்லாந் தவஞ் செய்க. அதன் பயனாய்ச் சித்தாந்த சைவ சாத்திரங்களைக் குருமுகத்தால் ஆராயுமுரிமை அவர்க்குக் கிட்டும். அப்போது அம்மறுப்புப் பொருள்களெல்லாம் உடன்பாட்டுப் பொருள்களென அவரால் தெளியப்படும். அவ்வுண்மை உலகின்மேல் ஆணையிட்டுக் கூறப்படுகிறது. 'வைய மெலாம் (அறிய)' என்றது கவி.

'நீ யறிய' என்றது சிவத்தின்மேல் ஆணை யென்றபடி.
ஏது என்னும் வினா இல்லை யென்னும் பொருளுடையது.

மூன்றாம் பாட்டு.

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வரிய தன்மையனை _ நோக்கிப்
பிரித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி.

பதவுரை.

எக்காலும் - எந்தக் காலத்திலும்
வாக்காலும் - வாக்கினாலும்
மிக்க - பொல்லாத
மனத்தாலும் - மனத்தினாலும்
தாக்கா - எட்டப்படாததும்
உணர்வு அரிய - ஆன்ம அறிவால் அறிந்து கொள்ளுதற்கு முடியாததும்
தன்மையனை - (ஆகிய) தன்மைகளையுடைய சிவத்தினது (நிலையை)
பிரித்து - வேறாக எடுத்து
நோக்கி - ஆராய்ந்து பார்த்து (அது)
அறிவு தம்மில் - அறிவாகாரமான ஆன்மாக்களோடு

பிரியாமைதானே	-	பிரியாமற் கலந்து ஒன்றாயிருக்கும் உண்மையைத்தானே
குறிக்கும்	-	(உலகத்தார்) தெரிந்துகொள்ளும்படி
அருள் நல்க	-	(கடவுள்) அருள் சுரக்கும் பொருட்டு
கொடி	-	துவசங் (கட்டப்பட்டது)

கருத்து.

எக்காலத்திலும் சிவம் வாக்குக்கும் மனத்துக்கும் ஆன்ம அறிவுக்கும் எட்டாதது. அப்பொருளைத் தனித்தெடுத்து ஆராயின் அது ஆன்மாக்களின் அறிவோடு பிரியாமற் கலந்து ஒன்றாயிருப்பது அறியப்படும். அதை உலகத்தார் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்காக அச் சிவமே அருள் சுரக்குமாறு கொடி கட்டப்பட்டது.

விளக்கம்.

வாக்காலும் மிக்க மனத்தாலும் தாக்கா : ஞானம் மூன்று வகை. ஒன்று பாச ஞானம். அது வாக்கெனவும் படும். இன்னொன்று பசுஞானம். அது மனமெனவும் படும். பின்னொன்று பதிஞானம். அது திருவடிஞானமெனவும் படும். நான்கு [1]வாக்குக்களும் சொற்பிரபஞ்சம். பிருதிவி முதல் நாத மீறாய் முப்பத்தாறு தத்துவங்களும் பொருட்பிரபஞ்சம். அவ்விரண்டையும் பற்றி நிகழும் உயிரின் ஏகதேச ஞானமே பாசஞானம். பாசம் வாயிலாக நிகழும் பசுஞானமே அது. பளிங்கென்பது ஒரு பொருள். அதற்குச் சொந்த வியல்பு உண்டு. ஆனால் அப்பளிங்கோடு சிவப்புப் பொரு ளொன்று சேர்க்கப்படுகிறது. அப்போது அப்படிகத்தினொளி தனித்தறியப்படாது. அப்படிகம் அச்செந் நிறத்தையே தன்னிறம் போற் காட்டும். அதன் சொந்த நிறம் அதற்குத் தன்னியல்பு. தன்னியல்பு - சிறப்பியல்பு. அதனைச்சார்ந்து அதனுடையதுபோல் தோன்றும் வேற்றுப் பொருளின் நிறம் அதற்குப் பொது வியல்பு. பளிங்கு (படிகம்) போல்வது உயிர். அவ்வேற்று நிறப் பொருள் போல்வன அப்பாச வகைகள்.

---

1. வாக்குகள் நான்கு, சூக்குமை - பைசந்தி - மத்திமை - வைகரி

வேற்று நிறப் பொருளின் [1]கூட்டரவாற் படிகத்தின் தன்னியல்பு விளங்காது. அதுபோல உயிருக்கும் பாசக் [2]கூட்டரவால் தன்னியல்பு விளங்காமற்போம். அப்போது உயிரின்பாலுள்ளது சுட்டறிவு.

உயிர் பாசங்களிலிருந்து நீங்கும். அப்பாசங்கள் அவ்வுயிருக்கு வியாப்பியம். அதனை அவ்வுயி ருணரும். அதனால் அவ்வுயிர்க்கு ஒரு வகை மேம்பா டுண்டு. அது சடுதிச் செருக்கு. அச்செருக்கு மலவாதனை பற்றி வருவது. அதனால் அவ்வுயிர் தன்னையே மதித்து அநாதி முத்த சிவம்போல் 'நானுமொரு பிரம மாவேன்' என்று சமவாத ஞானம் பேசும். அதுதான் பசுஞானம். நான் பிரம மென்னும் மாயாவாத ஞானம், பாசங்கள் நீங்கலே முத்தி யென்னும் பாடாண வாத ஞானம், கருவிகளிற் பரந்து சென்ற உயிரறிவு அவை பிரிந்தவழி அவ்வுயிர்மாட்டு வந்து ஒன்றி நிற்றலே முத்தியென்னும் பேதவாத ஞானம், ஆகிய இவையும் பசுஞானங்களே யாம். பசுஞானம் ஐயப்பட்ட அறிவு. அதுவும், பாச ஞானமாகிய சுட்டறிவும் உயிர்க்குச் சிவத்தைக் காட்டா. அதனையே 'வாக்காலு மிக்க மனத்தாலும் தாக்கா' என்றது கவி.

உணர்வு அரிய தன்மையன் : உயிர் பாசத்தோடு கூடிப் பசுவாயிற்று. அப்போது அதனியல்பு பசுத்துவ மெனப்படும். அந்நிலையில் உயிர் ஏகதேசஞான முடையது. பசுத்துவம் நீங்குஞ் சமயம் வரும். அப்போது அவ்வுயிர் வியாபகமாம். அதன்பாலிருப்பதும் சுட்டிறந்த அறிவு. அவ்வறிவுக்குப் பதிப்பொருள் கோசரமா மென்பர் சிலர். அப்படியன்று. சிவஞானத்தாலேயே சிவத்தைக் காணவேண்டும். அங்ஙனம் காணு முயிர் சிவத்தில் வியாப்பியமா யடங்கி அச்சிவஞானத்தாலேயே தன்னையுங் காணும். அங்ஙனமின்றித் தன்னறிவு கொண்டு அவ்வுயிரால் எந்த நிலையிலும் சிவத்தை யறியமுடியாது. 'உணர்வரிய தன்மையன்' என்ற அடிக்குப் பொருள் அது.

1, 2 - கூட்டரவு - கூட்டம் (அரவு - தொழிற்பெயர் விகுதி)
தொழிற்பெயர் விகுதிகள் :
"தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல், இல், என்பனவும் பிறவுமாம்.
(நன்னூல் - இலக்கணம்)
(உ-ம்) தேற்றரவு (தேற்றுதல்)

அறிவுதம்மிற் பிரியாமை தானே குறிக்கும் அருள் :

அதனால் உயிருக்கு அயல்போலுஞ் சிவம் என்னலாமா? அதுவுமில்லை. உயிர் வேறு, உடல்வேறு. ஆயினும் உயிர் உடலிற் கலந்து உடலேயா யிருக்கிறது. கண்ணுக்குங் கதிரவனுக்கும் ஒளியுண்டு. ஆனாற் கண் காணும், கதிரவன் காட்டுவான். அவ்வொளிகள் பெயரால் ஒன்று. இயல்பால் வேறு. கண்ணொளி காண்பதற்கு உயிரறிவு உடங்கியைய வேண்டும். அப்படியே சிவம் கலப்பால் உயிரேயாம்; பொருட்டன்மையால் உயிரின் வேறாம்; உயிருக்குயிராதற் றன்மையால் உயிரோ டுடனாம். அச்சம்பந்த விசேடமே அத்துவிதம். ஆகவே சிவம் உயிருக்கு அயலா யில்லையென்க.

இனித், திருவடி ஞான மாவ தென்னை?அது ஏழு விதம். ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பன அவை. முதல் ஐந்தற்கும் நூல் வேண்டும். அவை ஞானவேள்வி யெனப்படும். பின் இரண்டற்கும் நூல் வேண்டாம். ஓதல், ஓதுவித்தல்,கேட்பித்தல் என்னும் மூன்றாலும் உண்மைஞானம் நிகழாது. அவற்றைப் பொருந்திய உயிர் பதமுத்திகளைப் பெற்று ஆண்டு வைகி மீண்டு வந்து கேட்டலாதிகளாலேயே பரமுத்தியை யடையும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்களே உண்மைஞானம். கேட்டலாவது தேசி கனுபதேசத்தாற் சிவத்தை உயிர் செவிமடுத் தறிதல். அதனாற் பதி பசு பாசங்களினியல்புகள் அவ்வுயிர்க்குத் தனித்தனி தோன்றும். அது பேதத்தோற்றம். சிந்தித்தலாவது அவ்வுபதேசத்துக் கனுகூலமான அளவைகளால் சிவத்தை உயிர் கருதியறிதல். அதனால் பதிபசுக்களின் கலப்புநிலை அவ்வுயிர்க்குத் தோன்றும். அது அபேதத் தோற்றம். தெளிதலாவது சிந்திக்கப்பட்ட சிவத்தை உயிர் தன்னறிவிற் சிவஞானத்தால் விளங்க அறிதல். அதனாற் பதியின் பற்றற்ற நிலை அவ்வுயிர்க்குத் தனித்துத் தோன்றும். நிட்டை கூடலாவது அத்தெளிவால் உயிர் பாச நீங்கிச் சிவானந்தானுபூதியில் திளைத்தல். அதனால் அவ்வுயிர் தன் வியாபக அறிவு விளங்கப் பெற்றுப் பதியோ டொத்து நிற்கும். அந்நிலையைப் பதிஞான மொன்றே தரவல்லது. அதனை 'அறிவு தம்மில் பிரியாமைதானே குறிக்கும் அருள்' என்றது கவி.

நான்காம் பாட்டு.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து - நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி.

பதவுரை.

அஞ்சு எழுத்தும்	-	சி-வ-ய-ந-ம என்னும் ஐந்து எழுத்துக்களையும்,
எட்டு எழுத்தும்	-	ஓம்-ஹாம்-ஹௌம்-சி-வ-ய-ந-ம என்னும் எட்டு எழுத்துக்களையும்,
ஆறு எழுத்தும்	-	ஓம்-ந-ம-சி-வ-ய என்னும் ஆறு எழுத்துக்களையும்,
நால் எழுத்தும்	-	ஓம்-சி-வ-ய என்னும் நாலு எழுத்துக்களையும்,
பிஞ்சு எழுத்தும்	-	'வ' என்னும் பிஞ்செழுத்தையும்,
மேலை	-	மேலான
பெரு எழுத்தும்	-	'சி' என்னும் பெருவெழுத்தையும்
நெஞ்சு அழுத்தி	-	மனத்தில் தியானித்து அத்தியான முதிர்ச்சியால்
பேசும் எழுத்துடனே	-	'வ' என்னும் பேசும் எழுத்துத் தன்னையறிவிப்பதோடு
பேசா எழுத்தினையும்	-	'சி' என்னும் பேசா எழுத்தினையும்
கூசாமல்	-	மிகவும் இலகுவாக
காட்ட	-	பதிவிக்கவுஞ் செய்யும்படி
கொடி	-	துவசங் (கட்டப்பட்டது)

கருத்து.

அஞ்செழுத்து, எட்டெழுத்து, ஆறெழுத்து, நாலெழுத்து, பிஞ்செழுத்து, பெருவெழுத்து ஆகியவற்றை மனதில் தியானித்து, அதன் முதிர்ச்சியால் பேசும் எழுத்துத் தன்னையறிவிப்பதோடு பேசா வெழுத்தையும் சுலபமாக விளக்கஞ் செய்யும்படி கொடி கட்டப்பட்டது.

விளக்கம்

முப்பத்தாறு தத்துவங்களும் பாசக்கூட்டம். ஆசானுபதேசத்தால் உயிர் அதைவிட்டு விலகும். அப்போது அவ்வுயிரின் தன்னியல்பு விளங்கும். அதிற் சிவஞானம் பிரகாசிக்கும். அந்த ஞானத்தைக் கண்ணாகக் கொண்டு அதற்கு மூலமாகிய சிவத்தை அவ்வுயிர் பாசம் நீங்கிய தன்னறிவிற் காணும். ஆயினும் பாசத்தோடு பல்காற பயின்ற வாசனை அப்போதும் அவ்வுயிரை வந்து தாக்கலாம். அதனையும் விட்டு அவ்வுயிர் விலகவேண்டும். அதற்கு உதவுவதே பஞ்சாக்கர தியானம்.

பஞ்சாக்கரத்திற் பாசம் நீங்கிப் பதியைக் காண்டலென்ற பொருள் அடங்கி யிருக்கிறது. ஆகலின் அந்நிலையில் நிற்குமுயிர் அதனை ஓதவேண்டு மென்பது அவ்வுயிர்க்கு ஆசான் தந்த பணி என்க. (பணி - விதி)

தியானம் மூவகை. [1]உரை, [2]மந்தம், [3]மானதம் என்பன அவை. உரை, வாசகம், பாஷ்யம் என்பன ஒரு பொருட் சொற்கள். மந்தமும் உபாம்சும் ஒரு பொருட் சொற்கள். இங்கே கொள்ளப்பட்டது சுத்தமானதம். அஃதாவது அறிவாற் கணித்த லென்பது. இது அம் மூவகைத் தியானத்திற்கும் அப்பாற்பட்டது.

உரை or வாசகம் or பாஷ்யம்.

1. அருகிலிருக்கும் பிறர் செவிக்குங் கேட்கும்படி செபித்தல்.
2. Vidu or உபாம்சு - தன் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி நாநுனி உதட்டைத் தீண்ட மெள்ளச் செபித்தல்.
3. மானதம் - நாநுனி உதட்டைத் தீண்டாமல், ஒருமை பொருந்தி மனசினாலே செபித்தல்.

பஞ்சாக்கரத்தை நிற்கு முறையில் நின்று ஓது முறையில் ஓதவேண்டும். நிற்குமுறையும் ஓதுமுறையும் வேறாயிற் பயனில்லை. சிவமும் உயிரும் பொருளால் வேறு; ஆயினும் கலப்பால் ஒன்றே. ஞாயிற்றி னொளி வியாபகம். கண்ணொளி அதற்கடங்கிய வியாப்பியம். இரண்டொளிகளும் ஒன்றுதல் வேண்டும். அப்போது கண் தனக்குரிய பயனைப் பெறும். பயனாவது கண்ணைப் பீடித்திருந்த இருளின் நீக்கம். அப்படியே சிவம் வியாபகம். உயிர் வியாப்பியம். உயிர் அச்சிவ வியாபகத்து ளடங்கி அச் சிவத்தின் வழித்தாய் நிற்க வேண்டும். அதுவே உயிர் சிவத்துக்கு ஆற்றுந் தொண்டு. நிற்குமுறை யென்பது அதுவே. அதனோடு கூடிய ஓதுமுறையாவது யாது? ஓதல், கணித்தல், உச்சரித்தல், தியானித்தல் என்பன ஒன்று. தியானித்தற் கண் மந்திரங்கிரியை பாவனை வேண்டும். அவையொழிந்த தியானம் சிறந்ததன்று. அவை நிகழ வேண்டு மிடம் அகம். ஆண்டு இதயம் பூசைத்தானம். அதிற் பஞ்சாக்கரத்தாற் சிவத்துக்கு திருமேனி யமைத்து, கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, செபம், தவம், அன்பு என்னும் எட்டுப் பூக்களைக் கொண்டு பஞ்சாக்கரத்தாற் பூசை செய்யவேண்டும். நகாரம் திருவடி. மகாரம் திருவுந்தி. சிகாரம் திருத்தோள். வகாரம் திருமுகம். யகாரம் திருமுடி. இது தூல பஞ்சாக்கரத் திருமேனி. சூக்கும பஞ்சாக்கரத் திருமேனியாவது துடிக்கரத்திற் சிகாரமும், வீசிய கையில் வகாரமும், அபயகரத்தில் யகாரமும், அக்கினிக்கையில் நகாரமும், ஊன்றிய பாதத்தில் மகாரமுமாயிருப்பது. நாபி ஓமத்தானம். அதில் ஞான அனலை யெழுப்பிப் பஞ்சாக்கரத்தால் ஓமஞ் செய்யவேண்டும். புருவ நடு தியானத்தானம். அதிற் சிகார யகார வகாரமுறை கொண்டு பஞ்சாக்கரத்தாற் சிவோகம் பாவனை செய்யவேண்டும். சிகாரம்

தத்பதம். யகாரம் த்வம்பதம். வகாரம் அஸிபதம். தத்-அது, த்வம்-நீ, அஸி - ஆகின்றாய். நிற்கு முறை என்று முன் சொல்லப்பட்டது இப் பாவனைதான். முன் சொல்லப்பட்ட கலப்புந் தொண்டு மாகியவற்றை வாயிலாகக் கொண்டு சிவம் உயிரினிடம் அத்துவிதமாய் நின்று விளங்கித் தோன்றி மலத்தைக் கெடுக்கும். கவியில் 'நெஞ்சமுழுத்தி' யென்ற தொடரில் அவை யெல்லா முள.

அத்தகைய பேருபகாரத்தைச் செய்யவல்லது பஞ்சாக்கரம். அதுவே மந்திர ராஜம். அது பல பேதங்களையுடையது. அஞ்செழுத்து, எட்டெழுத்து முதலியன அவை. அஞ்செழுத்து சிவயநம. எட்டெழுத்து ஓம் ஹாம் ஹௌம் சிவயநம. ஆறெழுத்து ஓம் சிவயநம. நாலெழுத்து ஓம் சிவய. பிஞ்செழுத்து 'வ'. பெருவெழுத்து 'சி'. பிஞ்செழுத்து, பெருவெழுத்து என்பவெல்லாம் மந்திர சாத்திர பரிபாஷைகள். ஓங்காரமும் பஞ்சாக்கர மெனப்படும். 'திருவருட் பய' னில் ஐந்தெழுத் தருணிலை கூறவந்த சுவாமிகள் "இறைசத்தி பாச மெழின்மாயை யாவியுறநிற்கு மோங்காரத் துள்" என்றருளினார்கள். அப்பேதங்களைத் தனித்தனி யறிய விரும்புவார் பலர். நல்லாசிரியன்பால் உபதேச முகத்தால் அவை விளங்கிக் கோடற்பாலன. ஆயினும் அஞ்செழுத்தளவில் இங்குச் சிறிது சொல்லப்படும். சிகாரத்திற் சிவமும், வகாரத்தி லருளும், யகாரத்தி லுயிரும், நகாரத்திற் றிரோதானசத்தியும், மகாரத்தின் மலமும் உள்ளன. நகார மகாரங்களை முதலில் வைத்து உச்சரித்தல் பிறப்பிறப்பிற் படுத்தும். சிகார வகாரங்களையே முதலில் வைத் துச்சரிக்க. வீடு பேற்றைத் தருதற்குக் காரணமாயிருப்பது அதுவே. சூக்கும பஞ்சாக்கரம் அதுதான். அருள் தன்னையடுத்து நிற்கும் உயிரைச் சிவத்தோடு சேர்க்கும். அது காரண பஞ்சாக்கர மாகிய

சிகார யகார வகார முறை. அதில் மலவெழுத்துக்கள் விடப்படும். உச்சரிப்பு முறையில் பஞ்சாக்கரம் தூல சூக்கும காரணமெனப் பலவாம். அவற்றின் நுணுக்கங்களை ஆசானருள் கொண்டு பெரு நூல்களுட் கண்டு நலனெய்துக.

முற்றிற்று.

ஸ்ரீமத் உமாபதி சிவந் திருவடி வாழ்க.

ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க.

Jai Bharath

வாழ்த்து.

வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கும் முடிச்சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்.

- ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அருள்திரு மெய்கண்ட சிவம். அருள்திரு அருணந்தி சிவம். அருள்திரு மறை ஞானசம்பந்த சிவம். அருள்திரு உமாபதி சிவம்.

சந்தான குரவர்